ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

e-Newsletter

Vol 02: No: 04 - May 2012

Website: www.pccsl.lk
E-mail: pccsl@pccsl.lk
Tel: +94 115 353635
Fax: +94 115 335500

# ‘இன்டிபென்டன்ட்’ பத்திரிகையில் பிரசுரமாகிய சிரியாவில் கொல்லப்பட்ட குழந்தைகள் தொடர்பான புகைப்படம் கிளப்பிய சர்ச்சை

இங்கிலாந்தின் “இன்டிபென்டன்ட்” பத்திரிகையில் அண்மையில் பிரசுரிக்கப்பட்ட சிரியாவில் ஹவ்லா பிரதேசத்தில் கொல்லப்பட்ட குழந்தைகள் தொடர்பாக சர்ச்சைகள் கிளப்பப்பட்டன. இப்பிரசுரமானது இங்கிலாந்தின் பத்திரிகைத்துறையினருக்கான ஒழுக்கக்கோவையை மீறும் செயல் என்று சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் இத்தகை குற்றச்சாட்டுக்களுக்கு அப் பத்திரிகையின் ஆசிரியர் ஜோன் முல்லின் பதிலளித்துள்ளார்.

“இன்டிபென்டன்ட்” பத்திரிகையின் ஆசிரியர் ஜோன் முல்லின் பி.பி.சி வானொலி சேவைக்கு இதுபற்றி குறிப்பிடுகையில், நாம் இந்த கொலைகள் பற்றி 1000 அல்லது 2000 அப்படியும் இல்லாவிட்டால் 10.000 சொற்களில் எழுத முடிந்தாலும் அதன் தாக்கம் மற்றும் பாதிப்புக்கள் பற்றி உலகிற்கு உணர்த்துவதற்கு கொல்லப்பட்ட 09 குழந்தைகளின் புகைப்படங்களைப் பிரசுரிப்பதைத் தவிர வேறு செய்வதற்கு எதுவும் இல்லை.

இது பற்றி இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு பற்றி நான் அறிந்தேன். ஆனாலும் இப்புகைப்படங்களை பிரசுரிப்பதன் தார்ப்பரியம் பற்றி உணர்ந்திருந்ததாலே அவற்றை முன் பக்கத்தில் பிரசுரிக்காது 03 ஆம் பக்கத்தில் பிரசுரித்தேன். அவர் மேலும் குறிப்பிடுகையில் சிரியாவில் அண்மையில் 90 பேர் படுகொலை செய்யப்பட்டனர் இவர்களில் 32 பேர் 10 வயதுக்கும் கீழ்ப்பட்ட குழந்தைகளாவர். இக்குழந்தைகள் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்டிருந்தனர். இப்புகைப்படங்களை பிரசுரித்ததன் நோக்கம் ஐ.நா. வை இவ்விடயத்தில் தலையிடச் செய்வதாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஒழுக்கக்கோவை வழிகாட்டல்கள் ஒருபுறமிருக்க இது போன்ற விடயங்களில் இவ்வாறு பார்த்துக் கொண்டிருப்பது, இத்தகைய படுகொலைகளை தடுத்து நிறுத்தும் வகையில் ஆற்ற வேண்டிய பணியே இதுவாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இவ்வாறான விடயங்களின் போது ஆத்திரத்தைத் தூண்டாத விதமாக இலகுப் போக்கை கடைப்பிடிக்குமாறு இங்கிலாந்தின் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஆலோசனை வழங்கியிருக்கின்றது.

---

# சர்வதேச பத்திரிகைச் சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல்

மே மாதம் 03 ஆம் திகதி நினைவு கூறப்பட்ட சர்வதேச பத்திரிகைச் சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் அண்மையில் இலங்கை பத்தரிகை ஸ்தாபன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. “ஊடக சுதந்திரம் சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கின்றது” என்ற தலைப்பில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலுக்கு பிரபல ஊடகவியலாளரும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் தலை வருமான மொஹான் சமரநாயக்க தலைமை தங்கினார். இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதி ராஜ்பால் அபேநாயக்க, தெற்காசிய ஊடக அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி லக்ஷ்மன் குணசேகர, இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் அமைப்பின் பிரதிநிதி ரங்க ஜயசூரிய, சுதந்திர ஊடக அமைப்பின் பிரதிநிதி செல்வி திலீசா அபேவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலை “டெய்லி மிரர்” பத்திரிகையின் ஆசிரியர் சம்பிக லியனாரச்சி நெறிப்படுத்தினார். இந்த கலந்துரையாடலின்போது தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஊடகத்துறையில் எதிர் நோக்கப்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

## Inside

* பேச்சு சுதந்திரத்தை பாதுகாக்கும் புதிய சட்டம் பக் 02
* புதிய வெளியீடுகள் பக் 02
* ஒழுக்கக் கோவை பக் 03
* தேசிய ஊடக மகாநாடு பக் 03
* ஊடகவியலாளர் விருதுக்கு 249 விண்ணப்பங்கள் பக் 04
* இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தீர்ப்புக்கள் பக் 04
* வாசகர் உரிமை பக் 05

# பேச்சு சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையில் புதிய குற்றவியல் சட்டம்

பேச்சுச் சுதந்திரத்திற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தவது தொடர்பாக இங்கிலாந்து மகாராணியின் கவனம் திரும்பியிருப்பது 2012 மே மாதம் 09 ஆம் திகதி அவரால் நிகழ்த்தப்பட்ட உரையில் இருந்து வெளிப்பட்டிருக்கின்றது.

பேச்சின் மூலம் ஒருவருக்கு அல்லது சமூகங்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வது இங்கிலாந்து சட்டத்தின் படியும் குற்றமாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் பேச்சுச் சுதந்திரமானது மனிதனின் அடிப்படை உரிமையாக அமைவதால் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டாலும் அந்த சுதந்திரத்தை நசுக்காத வகையில் சட்டங்களை அறிமுகம் செய்வது தொடர்பாக இங்கிலாந்திலும் வேல்சிலும் கவனம் செலுத்தப்படுவதாக மகாராணி அண்மையில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரம் நீதி அமைச்சின் குறிப்பின் படி பொது மக்களின் ஆர்வத்தின் அடிப்படையில் பிரசுரம் செய்யப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக பாதுகாப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொறுப்புணர்வுடனான குறிப்பாக ஏதாவது முறைப்பாடுகள் தொடர்பாக நேரடியாக அவற்றைத் தீர்த்து வைப்பதில் அவற்றின் ஆசிரியரே பங்களிப்புச் செய்யும் இணையத்தளதங்கள் தொடர்பாகவும் பாதுகாப்பு வழங்கப்படும் என்ற விடயமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் மூலம் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், சமூக வலைப்பின்னல் பக்கங்களை உடையவர்கள் ஆகியோர் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் அவர்களாகவே தமது வெளியீடுகள் வாயிலாக பங்களிப்புச் செய்யும் போது பாதுகாப்பளிக்கப்படுவர்.

# புதிய வெளியீடுகள்




இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கடந்த 2011 செப்டம்பர் மாதம் 07-08 ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்திய தேசிய மாநாட்டின் தொகுப்பு நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. பத்திரிகைத் துறையில் சுய கட்டுப்பாட்டு ஒழுக்க நெறிக் கோவையின் முக்கியத்துவமும் தாக்கமும் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட மாநாட்டில் கலந்து கொண்ட பேச்சாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் தொகுப்பாக இந்த வெளியீடு அமைகின்றது.

## ஊடக தகவல் வழிகாட்டல் கையேடு




ஊடகவியலாளர்களுக்கு கைகொடுக்கும் வகையில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வெளியிட்டுள்ள ஊடக தகவல் வழிகாட்டல் கையேட்டின் மூன்றாம் பதிப்பு (Source Book) அண்மையில் வெளியிடப்பட்டது. பிரதி ஒன்றின் விலை ரூபா 500 ஆகும். பிரதிகளைப் பெற்றுக் கொள்ள விருப்புபவர்கள் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் 011 - 5353635 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



சர்வோதய அமைப்பின் தலைவர் ஏ.ரி. ஆரியரத்தனவை இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதி நிதியான கமல் லியனாரச்சி மற்றும் சுகுமார் ரொக்வூட் சந்தித்து உரையாடிய போது பிடிக்கப்பட்ட படம். இச் சந்திப்பின் போது திரு ஆரியாரத்னவுக்கு இலங்கை பத்திரிகைமுறைப்பாட்டு ஆணைக் குழுவின் செயற்பாடுகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

# ஒழுக்கக்கோவை

**8. தொந்தரவு மற்றும் தந்திரோபாயம்**

8.1 புகைப்பட ஊடகவியலாளர்கள் உட்பட ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்தல் அல்லது திரித்துக் கூறல் மூலம் அல்லது தந்திரமான வழிகை-லக் கயைாண்டு தகவலை அல்லது புகைப்படங்களைப் பொற்றுக்கொள்ள முயலலாகாது. பொது நலன் அல்லது விடயத்தைப் பெற்றுக்கொள்ள வேறு வழியில்லை என்ற நியா-யம் இல்லாமல் தொலை நோக்கு கண்ணாடி (ஸூம் லென்ஸ்) புகைப்படக் கருவிகளைப் அல்லது ஒற்றுக்கேட்கும் கருவி-களைப் பயன்படுத்தக் கூடாது.

**9 கௌரவம்**

9.1 ஒவ்வொரு ஊடகவியலாளரும் அவனது அல்லது அவளது தொழிலின் சுய கௌரவத்தைப் பேண வேண்டும்.

**10 பொதுமக்கள் நலன் பின்வருவனவற்றை உள்ளடக்கும்**

நல்லாட்சி மற்றும் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சனநாயகம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாத்தல் அத்துடன் குற்றச் செயலகள், ஊழல், நிர்வாக சீர்கேடு அல்லது பாரிய தவறொன்றினைக் கண்டு பிடித்தல் அல்லது அம்பலப்படுத்துதல் என்பன அடங்கும்.

பொதுமக்கள் பாதுகாப்பு, சமூக, கலாச்சார, கல்வி மற்றும் பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் பொதுமக்களோடு சம்பந்தப்பட்ட வேறு ஏதேனுமொரு பிரச்சினை போன்ற விடயத்தில் மற்றும் அல்லது மக்கள் நலனுக்கு எவ்வாறு தொண்டாற்றப்பட்டது என்பது பற்றி செய்தி ஆசிரியரிடமிருந்து முழுமையான விளக்கமொன்றைத் தேவைப்படுத்தவதற்கு பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு உரிமை உண்டு.




## கீழ்வரும் அமைப்புக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளன

1. இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
2. இலங்கை இதழியல் கல்லூரி
3. இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம்
4. ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம்
5. சுதந்திர ஊடக அமைப்பு
6. ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம்
7. இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்
8. இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர் சங்கம்
9. தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம்

- **இணையத்தள பிரசுரங்கள்**

அச்சு ஊடகங்களின் இணையத்தள பிரசுரங்களிலும் இந்த பத்திரிகை தர்மங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

**மீளாய்வு**

வருடத்திற்கு ஒரு முறைக்கு குறையாத விதத்தில் காலத்துக்கு காலம் இக்கோவையின் ஏற்பாடுகளை இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் மீளாய்வு செய்தல் வேண்டும். பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அல்லாதோருடன் பத்திரிகை ஒழுக்கக்கோவைக் குழுவினர் கலந்தாலோசிக்க வேண்டும்.

---

## தேசிய ஊடக மாநாடு

களனி பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய ஊடக மாநாடு அப்பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த 2012 மே மாதம் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்த மாநாடு களனி பல்கலைக்கழகத்தின் வெகுஜன தொடர்பு பிரிவின் தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பல்கலைக் கழகங்களின் ஊடகத் துறை விரிவுரையாளர்கள், பத்திரிகைத் துறைசார்ந்தவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட ஊடகத்துறையில் பரிச்சயம் பெற்ற அதிதிகள் 80 பேர் அளவில் பங்குபற்றினர்.

ஐந்து அமர்வுகளாக நடைபெற்ற இம்மாநாட்டில் தகவல் தொடர்பு மற்றும் ஊடகம் தொடர்பான பாடசாலை பாடவிதானத்ததில் எதிர் நோக்குகின்ற சவால்கள், சமகால ஊடக பிரச்சினைகள், இலங்கையில் விரிவடைந்து செல்லும் புதிய ஊடகம் தொடர்பான கொள்கைகள் ஆகிய தலைப்புக்களில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தனர். மாநாட்டின் நிறைவில் பங்குபற்றிய பிரதிநிதிகள் குழு புகைப்படத்திற்கு நிற்பதை படத்தில் காணலாம்




## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பாளர் சபை

சிவகுமார் நடேசன் (தலைவர்) ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: நிமல் வெல்கம, சிங்ஹ ரட்னதுங்க, மனிக் த சில்வா, என்.எம்.அமீன், சுந்தர நிஹதமானி த மெல், சிறி ரணசிங்க, சீதா ரஞ்சனி, ஜி. கொத்திகொட, மற்றும் அஜந்தா அப்புஹாராச்சி.

## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயலகம்

சுகுமார் ரொக்வூட் – பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி, கமல் லியனாரச்சி - சிங்கள மொழி மூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி, எம்.எஸ். அமீன் ஹுசைன் - தமிழ் மொழிமூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி

## 2011 ஆம் ஆண்டின் சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருதுக்கு 249 விண்ணப்பங்கள்

2011 ஆம் ஆண்டிற்கான சிறந்த பத்திரிகையாளர்களைத் தெரிவு செய்து விருது வழங்கும் நிகழ்வுக்கு 249 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இந்த விருதுகளுக்காக விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 2012 ஏப்ரில் 25 ஆம் திகத-தியுடன் நிறைவடைந்தது.

டியுடர் வீரசிங்க தலைமையிலான 10 அங்கத்தவர்களைக் கொண்ட நடுவர் குழுவைக் கொண்டு தகுதியானவர்கள்தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட விருக்கின்றனர். நடுவர் குழுவின் தலைவர் திரு வீரசிங்க குறிப்பிடுகையில் ஊடகவியலாளர்கள் அவர்களது தொழிலுக்கு சிறப்புத் தகைமையையும் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவது இவ்வாறு அதிகமானவர்கள் விண்ணப்பிப்பதில் இருந்து தெளிவாகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.



இவ்விருது வழங்கல் நிகழ்வு 2012 ஜுலை மாதம் 31 ஆம் திகதி மவுன்ட் லெவினியா ஹோட்டலில் நடைபெற ஏற்பாடாகியிருக்கின்றது. இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வருடாந்தம் ஏற்பாடு செய்யும் இவ்விருது வழங்கள் நிகழ்வின் போது பின்வரும் 14 பிரிவுகளைச் சேர்ந்த விருதுகள் வழங்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா ஞாபகார்த்த விருது
ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது
ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது. (மும்மொழிகளிலும்)
நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

## பத்திரிகைப் பிரசுரங்கள் தொடர்பாக இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தீர்ப்புக்கள்

பாலியல் குற்றச்சாட்டொன்றுக்கு ஆளான ஒருவர் அந்த வழக்கின் தீர்ப்பு வெளிவரு முன்னர் தற்கொலை செய்து கொண்டார். இவ்விடயம் அவரின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையிலான வார்த்தைப் பிரயோகம் ஒன்றுடன் “ஹெரல்ட் அன்ட் போஸ்ட்” என்ற பத்திரிகையில் செய்தியாக பிரசுரிக்கப்பட்டது. அதன் பின்னர் அந்த நபரின் நண்பர் ஒருவர் இவ்விடயத்தை இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் கவனத்திற்கு முறைப்பாடாக சமர்ப்பித்தார்.

இம்முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்திய ஆணைக்குழு இவ்வாறு மரணித்தவர்கள் தொடர்பாக அறிக்கையிடும் போது அவர்கள் பற்றி மிக மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்றும் அத்துடன் பயன்படுத்தும் தகவல்கள் குறிப்பிட்டவர் இல்லாத போது எத்தகைய முக்கியத்தவத்தைப் பெறுகின்றது என்ற விடயத்தையும் அறிக்கையிட முன்னர் கவனம் செலுத்துவது பிரதானமாகும் என்று இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்திரிகைத் துறைசார் ஒழுக்கக்கோவையை மையப்படுத்தி அந்நாட்டின் ப.மு.ஆ.கு. வின் பணிப்பாளர் ஸ்டெபன் அபெல் தொவித்துள்ளார். அதே நேரம் தற்கொலை செய்துகொண்ட அமீட் மொஹபீர் என்பவர் தொடர்பான பிரசுரம் குறித்து அவரின் நண்பர் ஒருவர் முறைப்பாடு தொவிக்கையில் குறிப்பிட்ட நபர் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக் குட்பத்தப்பட்டு பூர்த்தியடையாத நிலையில் அவரை “காமுகன்” இறந்து விட்டார் என்ற வார்த்தையைப் பிரயோகித்தமை பத்தரிகை ஒழுக்கக்கோவைக்கு முரணானது என்ற வாதத்தை முன்வைத்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்திய ஆணைக்குழு இந்த வர்ர்தைப்பிரயோகம் தவறானது என்பதை ஊர்ஜிதப்படுத்தியது. இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்கக்கோவையின் சரியான செய்தி வெளியீடு தொடர்பான பிரிவு இல 01 மேற்குறிப்பிட்ட செய்தி வெளியீட்டின் மூலம் மீறப்பட்டிருப்பதாக அந்த ஆணைக்குழு கருதுகின்றது. அத்துடன் எந்த சந்தர்ப்பத்திலும் செய்தி வெளியீடானது தனிநபர் வாழ்க்கையைப் பாதித்து நெருக்கடிக் குள்ளாக்குவதாக அமையக் கூடாது என்ற விடயமும் இங்கு முன்வைக்கப்பட்டது. இவ்வாறு பொறுப்பற்ற முறையில் உண்மைக்குப் புரம்பான தகவல்களை உள்ளடக்கி செய்தி வெளியிடும் போது அதனோடு சம்பந்தப்பட்ட நபர் மட்டுமல்லாது அவரின் முழுக் குடும்பமே பாதிக்கப்படுகின்றது என்ற விடயத்தை அபேல் சுட்டிக்காட்டியுள்ளார். அதன்படி அமீட் மொஹபீர் பற்றிய செய்தி வெளியீட்டில் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்கக் கோவை மீறப்பட்டிருந்த விடயத்தை ஹெரல்ட் போஸ்ட் பத்தரிகை ஏற்றுக் கொள்ள வேண்டியேற்பட்டது.

# புகைப்படம் தொடர்பான பிரசுரம்

இவ்வாறே இங்கிலாந்தின் “டெய்லி ரேகோர்ட்” என்ற பத்திரிகை விபத்தொன்றில் சிக்கி உடல் சிதைவடைந்து உயிரிழந்த ஒருவரின் புகைப்படத்தை பிரசுரித்த விடயம் தொடர்பாகவும் முறைப்பாடொன்று செய்யப்பட்டிருந்தது. அந்த புகைப்படம் வெளியாகிய பின்னரே அந்த நபர் உயிரிழந்த விடயம் அவரின் மனைவிக்கு தெரிய வந்திருந்தது. அத்துடன் அப் புகைப்படம் பார்ப்பவர்களின் மனக் கிலேசத்தை ஏற்படுத்தி கவலையை மேலிடச் செய்யும் விதமாக இருந்ததாகவும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த பிரசுரமும் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்கக்கோவையின் பிரிவு 5 யை மீறுவதாக அமைந்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. இந்த பிரசுரம் தொடர்பாகவும் குறிப்பிட்ட பத்திரிகை அந்த நபரின் மனைவியிடம் மன்னிப்புக் கோர வேண்டியேற்பட்டது. பத்திரிகை செய்திக்காக புகைப்படங்களை பிரசுரிக்கும் உரிமையைப் பத்திரிகைகள் பெற்றிருந்தாலும் எந்த நிலையிலான புகைப்படங்களைப் பிரசுரிக்க வேண்டும் என்பது தொடர்பாக பத்திரிகைகளின் ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்ற விடயம் முக்கியமானதாகும்.

---

## வாசகர் உரிமை தொடர்பான பத்திரிகை அறிவித்தல்

பத்திரிகைகள் இலங்கை பத்தரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வாசகர் உரிமை தொடர்பான பத்திரிகை அறிவித்தலை தமது பத்திரிகையில் பிரசுரம் செய்வதன் ஊடாக அப்பத்திரிகையும் பத்திரிகையின் ஊடகவியலாளர்களும் பத்திரிகைத் துறைசார் ஒழுக்கக் கோவைக்கு மதிப்பளிப்பதை வெளிப்படையாக காட்டுகின்றது.

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිෂම

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு

Press Complaints Commission of Sri Lanka

### வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக் குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk இணையத்தளம் : www.pccsl.lk